தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜூனன்

மரம் 12 ஆகஸ்ட் 2012 கனி 9

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office on 10 th Aug. 2012

To

கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்
சங்கீதம் 27:14

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA




BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com

*Our Radio & TV Programs*
SriLanka Radio Sw25,41 Meter
on Saturday 5.30P.M
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M

## கலிலேயா - Galiee



- இது கடற்கரையருகிலும், யோர்தான் நதியோரத்திலுமுள்ள புறஜாதியாருடைய கலிலேயா தேசமாக கருதப்பட்டது - ஏசா.9:1
- அத்தேசத்தைப் பிற்காலத்திலே (இயேசு) மகிமைப்படுத்துவார் என்ற தீர்க்கதரிசனத்தின்படி இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள் - ஏசா.9:2.
- இராஜாவாகிய சாலொமோன் எருசலேமில் தேவாலயம் கட்டத் தேவையான கேதுருமரங்களையும் தேவதாரு விருட்சங்களையும், பொன்னையும் தீருவின் ராஜாவாகிய ஈராமிடமிருந்து வாங்கிக்கொண்டு அதற்குப்பதிலாக கலிலேயா நாட்டிலுள்ள இருபது பட்டணங்களைக் கொடுத்தான் - 1இரா.9:11.
- இயேசுவின் அதிமான சுவிசேஷப்பணிகள் இவ்விடத்தில் நடைபெற்றது - மத்.4:12-25.
- இயேசு முதலாவது சில சீஷர்களைத் தெரிந்துகொண்ட இடமும் இதுவே - மத்.4:18-22.
- இயேசு தம்முடைய சீஷர்களுக்கு கலிலேயாவிலுள்ள மலையில் தமது பிரதான கட்டளையைக் கொடுத்தார் - மத்.28:18-20.
- கலிலேயா கடற்கரைக்கு அருகில் தம்மிடத்தில் வந்த திரளான ஜனங்களைக் கண்டு ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர்களுக்குப் போஜனம் கொடுத்தார் - யோவா.6:1-14.

## பவுல் பட்ட பாடுகள்
## The Endurance of Paul



| | |
|---|---|
| நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன் | -2கொ.11:23 |
| அதிகமாய் அடிபட்டவன் | -2கொ.11:23 |
| அதிகமாய் காவலில் இருந்தேன் | -2கொ.11:23 |
| அநேகந்தரம் மரண அவதியில் | -2கொ.11:23 |
| யூதர்களால் ஒன்று குறைய 40 அடியாக 5தரம் அடிபட்டேன் | -2கொ.11:24 |
| மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன் | -2கொ.11:25 |
| ஒருதரம் கல்லெறியுண்டேன் | -2கொ.11:25 |
| மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன் | -2கொ.11:25 |
| கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் | -2கொ.11:25 |
| அநேகந்தரம் பிராயணம்பண்ணினேன் | -2கொ.11:26 |
| ஆறுகளால் வந்த மோசங்களிலும்... | -2கொ.11:26-28 |
| நான் கூடையிலே வைக்கப்பட்டு தப்பினேன் | -2கொ.11:33 |

நீங்கள் கர்த்தருக்காக படும்பாடு எத்தகையது?

அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம் - 2தீமோ.2:12

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



# வேத அறிவுப் போட்டி எண்: 144

போட்டியாளர்கள் கவனத்திற்கு

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25 ஆம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.



1. எம்மார்க்கத்துக்கு விலகியிருக்கும்படியாக போதிக்கப்படுகிறோம்?
2. ஜனங்கள் அக்கினிக்கு இறையாக உழைத்து, ஜனங்கள் விருதாவாக இளைத்துப்போகிறது யாருடைய செயல்?
3. தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல் உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவன் யார்?
4. உன் நடுவில் சிறுமையும் எளிமையுமான ஜனத்தை மீதியாக வைப்பேன் என்றார். அவர்கள் யார்?
5. சபையானது உத்தம விதவைகளானவர்களுக்கு உதவி செய்யவேண்டுமா?
6. நான் உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று யாருக்கு சொல்லப்பட்டது?
7. எவ்விருவருடைய மதிகேடு எல்லாருக்கும் வெளிப்பட்டது?
8. கர்த்தர் பரிசுத்த தேசத்திலே யூதாவாகிய தமது பங்கைச் சுதந்தரித்து, திரும்பவும் எதைத் தெரிந்துகொள்வார் என்று சொல்லப்பட்டிருந்தது?
9. நியாயசாஸ்திரியாகிய சேனாவுக்கும் அப்பொல்லோவுக்கும் ஒரு குறைவுமில்லாதபடிக்கு அவர்களை ஜாக்கிரதையாய் விசாரித்து வழி விட்டனுப்பு என்று யார் யாருக்கு எழுதுவது?
10. யாருடைய உடன்படிக்கையைக் கெடுத்துப்போட்டீர்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்?

### பவுலின் அசையாத நம்பிக்கை - Paul`s Unshakable Hope



- ➪ என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு -பிலி.4:13
- ➪ நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்- 2தீமோ.4:7
- ➪ நீதியின் கிரீடம்எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தருவார் - 2தீமோ.4:8
- ➪ கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தையப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் - பிலி.3:14
- ➪ கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் - பிலி.1:21
- ➪ கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன் - ரோம.1:16

உங்களுடைய நம்பிக்கை எப்படிப்பட்டது?

நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும் - கொலோ.1:22

சிறுவர் பகுதி

# மார்த்தாள், மரியாள்

K.Mohan

**வேத பகுதி: லூக்கா 10:38–42**



**எ**ன் அருமை பிள்ளைகளுக்கு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகள். இன்று நாம் மார்த்தாள், மரியாள் என்ற இரண்டு சகோதரிகளைக் குறித்துப் பார்ப்போம்.

இயேசு கிறிஸ்து பிரயாணமாய் போகையில் மார்த்தாளின் ஊருக்கு வந்தார். மார்த்தாளுக்கு இயேசுவை பார்த்தவுடன் ஒரே சந்தோஷம் அவரை தன்வீட்டிற்கு அழைக்கவேண்டும் என்று நினைத்து அழைத்தாள். இயேசுவும் உடனே அவள் வீட்டிற்கு போனார். மார்த்தாளுக்கு மரியாள் என்னபட்ட ஒரு சகோதரி இருந்தாள். அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்தாள். மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து. இயேசுவினிடத்தில் வந்து ஆண்டவரே, நான் தனியே வேலைசெய்யும்படி என் சகோதரி என்னை விட்டுவந்திருக்கிறதைக் குறித்து உமக்கு கவலையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும் ஆண்டவரே என்றாள். பார்த்தீர்களா? மரியாள் வேலைசெய்யாமல் இயேசுவின் போதனைகளைக் கேட்டுக்கொண்டிருப்பதை பார்த்த மார்த்தாளுக்கு பொறுக்க முடியவில்லை.

இயேசு மார்த்தாளை நோக்கி: "மாத்தாளே, மாத்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்" என்றார். என்ன பிள்ளைகளா புரிகிறதா. மார்த்தாள் தான் இயேசுவை வீட்டிற்கு அழைத்தாள் ஆனால் அவளோ வீட்டுக்கு வந்த இயேசுவோடு உட்கார்ந்து பேசவில்லை. மாறாக பற்பல வேலைகளை செய்வதில் முக்கிய கவனம் செலுத்தினாள். மரியாளோ அப்படியில்லை இயேசுவின் பாத்தினருகே உட்கார்ந்து இயேசு சொல்வதைக் கவனமாக கேட்டுக்கொண்டிருந்தாள். இதுதான் தேவையானது. வேலையை எப்பொழுது வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். ஆனால் தேவையான நேரத்தில் தேவையானதிற்கு முக்கியதுவம் கொடுக்காமல் இருப்போமானால் பின்பு விரும்பி தேடினாலும் கிடைக்காது. ஆகையால் தான் மரியாளைக்குறித்து சொல்லும்போது தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார். நீங்கள் இந்த விதமாக நல்ல பங்கை தெரிந்து கொண்டீர்களா? அப்படியில்லை என்றால் முதலாவது கர்த்தருடைய வார்த்தைக்கு முதலிடம் கொடுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம்**

“முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்” (மத்.6:33).




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

# THE WORD OF CHRIST


புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 12 ஆகஸ்ட் - 2012 கனி - 9


ஆசிரியருரை

## அவருடைய நாமத்திற்காக...

## For His Name`s Sake...



அப்போஸ்தலர்கள் பல பாடுகளை அநுபவித்தனர். முதல் நூற்றாண்டு காலத்தில் பிரதான ஆசாரியன் கடுமையான கட்டளைகளை பிறப்பித்திருந்தான். என்னவென்றால்; “நீங்கள் அந்த நாமத்தைக்குறித்துப் போதகம் பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளை யிடவில்லையா? அப்படியிருந்தும், இதோ, எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பி, அந்த மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள்மேல் சுமத்தவேண்டுமென்றிருக்கிறீர்கள் என்று சொன்னான்” (அப்.5:28). இதைக்கேட்ட அப்போஸ்தலர்கள் அவர்களுக்குப் பயப்படாமல்; பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்; மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது என்று சொல்லி இயேசுவைக்குறித்து பிரசங்கம் பண்ணினார்கள். ஆண்டவருடைய சமூகத்தில் அநேக நன்மைகளைப் பெற்ற நாம் இவ்விதமாக இருக்கிறோமா?

உலக சட்டங்கள் சிலவேளைகளில் நம்மைக் கட்டுப்படுத்தி விடுகிறது. அவைகளுக்குப் பயந்துபோய் ஆண்டவருடைய சுவிசேஷத்தை அறிவிப்பதில் சற்று பயப்பட ஆரம்பித்துவிடுகிறோம். இங்கே அப்போஸ்தலர்கள் மனுஷருக்கு பயப்படவில்லை, தேவனுக்குக் கீழ்ப்படிந்து எங்குந்திரிந்து சுவிசேஷத்தை பிரசங்கம்பண்ணினார்கள். அவருடைய நாமத்திற்காக என்ன கஷ்டங்கள் வந்தபோதிலும் அதை எதிர்த்து தேவனுடைய வசனத்தை அறிவிப்பதில் கவனமாயிருந்தார்கள். அப்போஸ்தலனாகிய பவுலுக்கு சுவிசேஷத்தினிமித்தம் அநேக பாடுகள் வந்தது. ஒரு முறை “அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள் வந்து, ஜனங்களுக்குப் போதனைசெய்து, பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப்போனானென்று எண்ணி; அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக்கொண்டுபோனார்கள். சீஷர்கள் அவனைச் சூழ்ந்துநிற்கையில், அவன் எழுந்து, பட்டணத்திற்குள் பிரவேசித்தான். மறுநாளில்

பர்னபாவுடனேகூடத் தெர்பைக்குப் புறப்பட்டுப்போனான். அந்தப் பட்டணத்தில் அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அநேகரைச் சீஷராக்கினபின்பு, லீஸ்திராவுக்கும் இக்கோனியாவுக்கும் அந்தியோகியாவுக்கும் திரும்பி வந்து, சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று சொன்னார்கள்'' என அப்.14:19-22 முடிய உள்ள வசனங்களில் வாசிக்கிறோம். யாராவது நம்மை அடித்துவிட்டால் போதும் எங்கில்லாத கோபம் எல்லாம் வந்துவிடும். அடுத்து என்ன நடக்கும் என்று நமக்கே தெரியாது. ஆனால் இங்கு பவுல் இயேசுவின் நாமத்திற்காக கல்லெறியுண்டு அவன் மரித்துப்போனான் என்று அவனை வெளியே இழுத்துக்கொண்டுபோனார்கள். அவனோ தேவனுடைய பெலத்தினால் பெலன் கொண்டு மற்றஇடங்களுக்குச் சென்று பர்னபாவுடனே சுவிசேஷத்தை அறிவிக்கவும், தான் இவ்வளவு கஷ்டத்தில் இருந்து கொண்டும், சீஷர்களுடைய மனதை திடப்படுத்தவும் செய்ததை நாம் நினைத்துப்பார்க்கும்போது நாமெல்லாம் கர்த்தருக்காக என்ன செய்திருக்கிறோம், எதை சாதித்திருக்கிறோம் ஒன்றுமேயில்லை என எண்ணத் தோன்றுகிறது. இருந்தபோதும் அவர் நம்மை நேசித்து நம்முடைய ஜெபத்தைக் கேட்டு நம்மை ஆசீர்வதித்துவருகிறார். நாமும் அவருக்காக பெரிய காரியங்களைச் செய்வோம்.

மேலும். அப்போஸ்தலர்கள்; ''அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்'' (அப்.5:41,42). ஒரு மனிதன் எதை வேண்டுமானாலும் தாங்கிக்கொள்ளுவான் ஆனால் அவனால் அவமானத்தை மட்டும் தாங்கிக்கொள்ளமுடியாது. அப்போஸ்தலர்களோ தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால் அதை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டனர். ஆண்டவர் ஊழியத்திற்கு அழைக்கும்போது என்னிமித்தமாக அநேக பாடுகளை அனுபவிப்பீர்கள் என்றும், பச்சைமரமாகிய எனக்கே இப்படியென்றால் பட்டமரமாகிய உங்களுக்கு எப்படியோ என்றும் சொல்லியிருந்தார். ஆகையால் அவமானத்தை அவர்கள் சந்தோஷமாக எண்ணினர். ஒவ்வொருவரும் அவருடைய நாமத்தினிமித்தம் வரக்கூடிய பாடுகளை ஈசியாக எடுத்துக்கொள்ள கற்றுக்கொள்ளவேண்டும். ஐயோ இத்தனை பாடுகளா! என்று மலைத்து நிற்போமானால், பிசாசு நம்மிலும் மேலானவனாக இருந்து நம்மை சோர்ந்துபோக செய்துவிடுவான். ஒருமுறை பிரதான ஆசாரியனாகிய அனனியா பவுலுக்குச் சமீபமாய் நின்றவர்களை நோக்கி: இவன் வாயில் அடியுங்கள் என்று கட்டளையிட்டான். அதற்கு தேவன் உம்மை அடிப்பார் என்று சொல்லி அமைதலோடு இருந்தான். தேவனுடைய நாமத்தை அறிந்தவர்களே தேவனுடைய சத்தியத்திற்கு எதிராய் இருந்தார்கள். இவர்கள் மத்தியிலேதான் அப்போஸ்தலர்கள் சுத்தசுவிசேஷத்தை முதலாவது அறிவிக்கும்படியாக அனுப்பப்பட்டார்கள். இயேசுவின் நாமத்திற்காக அநேக பாடுகளை அநுபவித்துக்கொண்டிருக்கும் பவுல்: ''முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக



நான் ஒரு கணவனுக்குரிய நிலையினை, மனைவியினிடத்தில் கண்டிப்பு மற்றும் முன்கோபத்துடன் நடந்துகொண்ட அவளுடைய கணவனிடத்தில் கண்டிருக்கிறேன். இயற்கையான பதில் மனைவியினுடைய பங்கிலும் அதே கண்டிப்பான ஜுவாலையினை அதிகமாக தூண்டிவிட்டதைப் போல் இருந்திருக்கும். மாறாக அவள் நீதிமொழிகள்15:1–ல் சாலொமோனால் பேசப்பட்டது போல நடந்து கொண்டாள்: ''மெதுவான பிரதியுத்திரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்''. பிரதியுத்திரமாக, அவள் அவர்களுக்கிடையே கோபத்தினை சகஜநிலைக்கு மாற்றிவிட்டாள், ஏனென்றால் அவள் தன் கணவன் நியாயமாக யோக்கியத்துடன் நடந்து கொண்டது போல அவள் அவனுக்குப் பதிலளிக்கவில்லை.

ஆம், அதுவே பொறுமையோடு பதிலளித்தல், மற்றும் சமாதானத்தை நாடுதல் போன்றவை கோபத்தில் சவுக்கடி கொடுப்பதைக் காட்டிலும் பிரச்சனைகளை விலக்குவதற்கு ஒரு திறவுகோலாயிருக்கிறது. பவுலுடைய எச்சரிப்பின் இரண்டாவது பாகம் நாம், 'சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்பாகவே நம் எரிச்சல் தணியவேண்டும்'' என்பதாகும். நீங்கள் கோபமனதுடனே உங்கள் படுக்கைக்குச் சென்றால், நீங்கள் விழித்தெழும்போது நீங்கள் இன்னும் மோசமான உணர்வடைந்ததை எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? எனவே தான் வெகு நீண்ட நாட்களுக்கு மேலாக நமக்குள் கோபம் குடிகொண்டிருக்க அனுமதிக்கக் கூடாது என வெளிப்படையாகவே நாம் எச்சரிக்கப்படுகிறோம். இது அழித்து விடும்.

- ஜுலை மாத தமிழக ஊழியர் கூட்டம் ஆசீர்வாதமாக நடைபெற்றதற்காக...
- உண்மையுள்ள தேவ மனிதர்கள் எழும்ப...
- எல்லோரும் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடைய...
- ஊழியத்தை தாங்குகிற அநேக குடும்பங்கள் எழும்ப...
- மாத இதழ்




காடு செழித்தால் நாடு செழிக்கும்

**ஒவ்வொரு முறையும் கடிதம் எழுதும்போது அல்லது மணியாடர், காசோலை அனுப்பும்போதும் உங்களுடைய பதிவு எண் Ref.No-யை எழுதவும்.**

**நீங்கள் முகவரி மாறும்போது உங்களுடைய புதிய முகவரி மற்றும் பழைய பதிவு எண்ணையும் தெரியப்படுத்தவும்.**

## பொது அறிவு சோதனை

1. அதிக ஒளி கொண்ட கிரகம் எது?
அ) வீனஸ் ஆ) மெர்குரி இ) ஜூபிடர்
2. இந்தியாவில் மீன் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மாநிலம் எது?
அ) தமிழகம் ஆ) கேரளா இ) மேற்கு வங்கம்
3. சிரிப்பூட்டும் வாயு என அழைக்கப்படுவது எது?
அ) ஆக்ஸிஜன் ஆ) நைட்ரஸ் ஆக்சைடு இ) சல்பர் டை ஆக்சைடு
4. மிதவை விதியை கூறியவர் யார்?
அ) நியூட்டன் ஆ) ஐன்ஸ்டீன் இ) ஆர்க்கிமிடிஸ்
5. குளோமெருலஸோடு தொடர்புடைய உறுப்பு எது?
அ) சிறுநீரகம் ஆ) கல்லீரல் இ) நுரையீரல்



**(விடைகள்: 1. அ 2. இ 3. ஆ 4. இ 5. அ)**

வடுக்கள் ஏற்பட்டுள்ளன. கடினமான உணர்ச்சியற்ற நிலையிலும், வடுக்களின் அடியிலும் புதைக்கப்பட்டவைகள் கோபம், மனக்காயம், மனக்கசப்பு போன்றவைகள் ஒரு வளருகின்ற ஒரு வேராக இருக்கின்றது.

அடுத்த முறை கோபம் வெளிப்படுகிறது, இது முந்தின சண்டையில் கொழுந்துவிட்டு எரிகின்றவையான கசப்பின் அடுக்கினை ஒளிவிடச்செய்கிறது– மேலும் அதற்கு மேல் ஒரு அடுக்கு, மேலும் அதற்கு மேல் ஒரு அடுக்கு, மேலும் அதற்கு மேல் ஒரு அடுக்கு ...

எனவே திரி அணைகிறது, கோபம் அதிவேகமாக வெடிக்கிறது, கசப்பு மிகக் கசப்பாகின்றது– சண்டை மிக மோசமாகின்றது. கணவனும், மனைவியும் சண்டையிட்டுக்கொண்டிராதிருந்தாலும் கூட எப்பொழுது அவர்களுக்கிடையே ஒருவருக்கொருவர் மனக்கசப்பில் வளருவார்கள்? இருவருக்கிடையே ஒருவர் இன்னொருவரை விட மிகச்சிறந்தவராக எப்பொழுது நினைப்பார்கள்? இவைகளெல்லாம் திருமண வாழ்விற்குள் அல்லது விவாகரத்தின் முடிவில் பேதத்தினால் ஏற்படும் விளைவாகிய இவைகளெல்லாம் அடிப்படை பிரச்சனைகளாக இருக்கின்றன.

கணவன் மனைவி இருவரும் **திரும்பிச் சென்று குற்றத்தை ஒப்புக்கொள்ளமாட்டேன் என்ற தங்களுடைய தீர்மானத்தைக் குறித்து மறு யோசனை செய்ய வேண்டியது அவசியம்.** 'என்னை மன்னித்துக் கொள்'– எப்பேர்பட்ட எளிய வார்த்தைகள், சொல்லுவதற்கு மிக சுலபமானது, மிகவும் சத்திவாய்ந்தது!

'என்னை மன்னித்துக்கொள்' என்று நேர்மையுடன் கூறுவது என்ன விளைவை ஏற்படுத்துகிறது? முதலாவது, இது நேர்மையுடையதாக இருக்குமானால், இது ஒருவருடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்கின்ற மற்றும் ஒருவர் ஒரு சார்புடையவராக அல்லது இருவர் மேலும் குற்றம் உண்டு எனவும் தீர்மானிக்கின்ற முடிவினை கொண்டுவரும். தவறை ஒப்புக்கொள்ளுகின்ற செயல் தவறான பெருமையை அழித்து, தாழ்மையான மனநிலையினை உருவாக்கும். தன் குற்றத்திற்காக மனவருந்தும் இந்த மனநிலையுடனும், குற்றத்தை ஒத்துக்கொள்ளக்கூடிய இந்த வலி நிவாரணியுடனும், இருவருடைய இருதயங்களில் குணமாக்கும் செயல் ஆரம்பிக்கும். மனக்கடினத்தின் அடுக்குகள் மற்றும் மனக்கசப்பினால் குமுறிக்கொண்டிருக்கும் ஜுவாலையும் உருகிப் போய்விடும், மேலும் கடந்த காலத்தின் பிரச்சனைகளின்றி உள்ளான சமாதானத்தின் உணர்வுகளால் நாளுக்கு நாள் நல் உறவு முன்னேற்றமடைந்து கொண்டே செல்லும்.

எபேசியர் **4:26**–ல், ஆவியின் தூண்டுதலினால் பவுல் இவ்வார்த்தைகளை எழுதினார், "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது". இந்த வார்த்தைகளின் பொருள் என்ன? முதலாவது, கிறிஸ்தவர்கள் ஒருபோதும் கோபங் கொள்ளக் கூடாது என அவர் கூறவில்லை, அல்லது கோபங்கொள்ளுவது பாவம் என்றும் கூறவில்லை. இவ்வுலகில் தவறான காரியங்கள் பல இருக்கின்றன, மேலும் அவைகளின் மேல் கோபங்கொள்ளுவது நீதியுள்ளதும் சரியானதுமாக இருக்கிறது. ஆனால் பவுல் சொன்னார், "உங்களுடைய கோபம் பாவஞ்செய்வதற்கு இடங்கொடாதீர்கள்!" அது முழுவதும் வித்தியாசமானது. மேலும் அதிகமான ஜனங்கள் செய்யக்கூடியதும் அதுவே!



காரியங்களை நடப்பிக்கவேண்டுமென்று நினைத்திருந்தேன். அப்படியே நான் எருசலேமிலும் செய்தேன். நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரம் பெற்று, பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன்; அவர்கள் கொலைசெய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந்தேன். சகல ஜெபஆலயங்களிலும் நான் அவர்களை அநேகந்தரம் தண்டித்து, தேவதூஷணஞ் சொல்லக் கட்டாயப்படுத்தினேன்; அவர்கள்பேரில் மூர்க்கவெறிகொண்டவனாய் அந்நியபட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன்" என்று சொல்லுகிறான் (அப்.26:9-11). இப்படியிருந்த பவுல் கர்த்தராகிய இயேசுவினால் சந்திக்கப்பட்டு அந்த மார்க்கத்திற்கு இசைவாய் ஊழியஞ்செய்கிறவனாய் மாற்றப்பட்டான். அநேகரை சிறைச்சாலையில் அடைத்து துன்பப்படுத்திய அவன் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு அவர்களைப் பார்க்கிலும், அதிக துன்பத்தை இயேசுவின் நாமத்திற்காக அநுபவிக்கிறவனாக மாற்றப்பட்டான். எத்தனை ஆச்சரியமான காரியம் என்று பார்த்தீர்களா! யாராவது துன்பத்தை விலைகொடுத்து வாங்குவார்களா, உலகத்தில் இருக்கும்வரை சந்தோஷமாக பிரச்சனை இல்லாத வாழ்க்கை வாழவே விரும்புவார்கள். ஆனால் பவுலின் வாழ்க்கை முழுவதும் பாடுகளும் துன்பங்களும் நிறைந்ததாக இருந்தது. உங்களுடைய வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கிறது, அவருடைய நாமத்திற்காக நீங்கள் பாடுகளை அநுபவிக்கிறீர்களா, அல்லது பாடுகள் வந்தவுடன் அவரை மறுதலித்துப்போகின்றீர்களா? பவுலையும் சீலாவையும் பிடித்து அநேக அடிகள் அடித்து சிறைச்சாலையிலே உள்ள தொழுமரத்தில் கட்டிவைத்தார்கள். பவுலும் சீலாவும் அங்கே உட்கார்ந்து அழுதுகொண்டிருக்கவில்லை. தேவனை துதித்துப்பாடினார்கள். அப்படியானால் அவர்களுக்கு அந்த பாடுகளை அநுபவிப்பதில் சந்தோஷமடைந்திருக்கிறார்கள் என்று அறிகிறோம். அந்நாட்களில் யூதர்கள் ஒரு குற்றவாளியை அடிக்க 39அடிகள் அடித்திருக்கிறார்கள். பவுல் யூதர்களால் ஒன்று குறைய 40 அடியாக ஐந்து தரம் அடிபட்டேன் என்கிறார். அத்தனை அடிகளையும் வாங்கிக்கொண்டு ஒரு மிஷனரியாக பணியாற்றியிருக்கிறார் என்றால், அவருடைய நம்பிக்கை எப்படிப்பட்டது, அவருடைய விசுவாசம் எப்படிப்பட்டது என்று பார்த்தீர்களா?

அப்போஸ்தலர்கள் அவருடைய நாமத்துக்காக மரிக்கவும் ஆயத்தமாக இருந்தார்கள். ஆகையினாலே மரணத்தைக்குறித்து அவர்கள் பயப்படவில்லை. பவுல் சொல்லும்போது; "எங்களுக்குத் தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள் போலக் கடைசியானவர்களாய்க் காணப்படப்பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம்" என்கிறார் (அப்.4:9). இந்த அப்போஸ்தலர்களுக்கு மேலாக எந்த அப்போஸ்தலர்களையும் கர்த்தர் ஏற்படுத்தவில்லை. ஏனெனில் இவர்களே அனுப்பப்பட்டவர்கள், இவர்களே இயேசுகிறிஸ்துவினால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். இன்று இப்படிப்பட்ட அப்போஸ்தலர்கள் இல்லை. அவர்கள் மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள்போல காணப்பட்டபடியால் அந்தப்படியாகவே அவர்களுக்கு நிகழ்ந்ததாக வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். சிலரை சிலுவைகளில் தலைகீழாக வைத்து அறைந்து கொன்று போட்டதாகவும், சிலரை பட்டயத்தினால் கொன்று

போட்டதாகவும் சொல்லுகிறார்கள். அப்போஸ்தலர்களுடைய முடிவு அப்படியாக முடிந்தது. ஆனால் அவர்கள் உலகமெங்கும் செய்த ஊழியம் இன்றும் பலன் கொடுத்துக்கொண்டிருக்கிறது, ஆகையினாலே நாம் கர்த்தரையும் அவருடைய மெய்யான சபையையும் அவர் கொடுக்கும் இலவசமான இரட்சிப்பையும் பெற்றுக்கொள்கிறோம்.

மேலும், பவுல் கிறிஸ்துவுக்காக... “என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்” என்கிறார் (அப்.20:24). இன்றைக்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விருப்பம் இருக்கிறது. ஆனால் பவுல் சுவிசேஷத்தை பிரசங்கிக்கவும், கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே பிரயாசப்பட்டார். கணவன் மனைவிக்கு எப்படி பிரியமாய் இருக்கலாம் என்றும் மனைவி கணவனுக்கு எப்படி பிரியமாய் இருக்கலாம் என்று விரும்புகிறார்கள். ஆனால், பவுல் கர்த்தருக்கு எப்படி பிரியமாய் இருக்கலாம் என்று விரும்பினார். உங்களுடைய விருப்பமும் இப்படியே இருக்கட்டும். அதைப்போல எப்பாப்பிரோதீத்து என்று சொல்லக்கூடிய ஊழியன் “ஊழியத்திலே உங்கள் குறைவை நிறைவாக்கும்படிக்கு, அவன் தன் பிராணனையும் எண்ணாமல், கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணத்திற்குச் சமீபமாயிருந்தான்” என பவுல் பிலிப்பிய சபையாருக்கு எழுதுகிறார் (பிலி.2:30). இச்செய்தியை கேட்டுக்கொண்டிருக்கிற அன்பு தேவ ஜனமே, நீங்கள் அவருடைய நாமத்திற்காக வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? அப்போஸ்தலர்கள் அவருடைய நாமத்திற்காக வாழ்ந்து மரித்திருக்கிறார்கள். நீங்களும் நானும் அவ்விதமாக கர்த்தருடைய நாமத்திற்காக வாழ்வோமானால் அப்போஸ்தலர்களோடு கர்த்தருடைய சமுகத்தில் காணப்படுவோம். அவருடைய நாமத்திற்காக வாழுங்கள்.

**நாம் அவரோடு பாடுகளைச் சகித்தோமானால் அவரோடு ஆளுகை செய்வோமா?**

ஆம், “இந்த வார்த்தை உண்மையுள்ளது; என்னவெனில். நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூட பிழைத்துமிருப்போம். அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார்” என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபம் 2-ம் அதிகாரம் 11,12 வசனங்களில் வாசிக்கின்றோம். இப்பூமியிலே அவருடைய நாமத்திற்காக பாடுகளை சகிக்கும்போது அல்லது பாடுபடும்போது அவரோடேகூட ஆளுகை செய்வோம் என்ற நம்பிக்கையோடு பாடுகளை ஏற்றுக்கொண்டு அவைகளை சந்தோஷமாக எண்ணுங்கள். நாங்கள் உங்களுக்காகவும் உங்களுடைய குடும்பங்களுக்காகவும் ஜெபிக்கிறோம்.

"தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல" (மத்தேயு10:38)



பெண்கள் பகுதி

# நான் குற்றத்தை ஒப்புக்கொள்ளமாட்டேன்
# I Won`t Apoligize

-Betty





ஒருவன் சச்சரவுகளில் அநீதியான வழியைச் சார்ந்திருக்கின்ற அல்லது மற்றவர்கள் மீது கெட்ட நடவடிக்கைகளைக் காண்பிக்கின்ற வேளையில் குற்றத்தை ஒத்துக்கொள்ள மறுத்தல்– ‘மனித’ இயல்பாக இருக்கலாம். அல்லது இது “குற்றத்தை ஒப்புக் கொள்ளுவதின் மூலம் நான் குற்றவாளியாய் இருக்கிறேன் என நான் ஒத்துக்கொள்ளாவிட்டால், அப்புறம் இது மற்ற மனிதனுக்கு பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வழி ஏற்படும்” என்ற மனநிலை வளர்ந்து கொண்டேயிருக்கலாம்.

முகத்தோற்றத்தையும் இருதயத்தையும் தெளிவுபடுத்தாதிருக்கும் எந்த அடிப்படைக் காரணமும், ‘என்னை மன்னித்துவிடு’ என்ற எளிய வார்த்தைகள் சண்டை நேரத்தினை முறியடிக்கும் நல்ல விளைவாக இருக்கிறது.

மனிதர்கள் வித்தியாசமான கோணத்தில் ஒருவருக்கொருவர் மிகப்பெரிய வேறுபாட்டுடன் இருக்கின்றனர். வழக்கமாக ஒரு நிச்சயிக்கப்பட்டவற்றிலிருந்து காரணமில்லா விரோதநோக்குடைய கருத்தினை மற்றவற்றில் அல்ல நம்முடைய சுய காரியங்களில் காண்கின்றோம். கணவனும் மனைவியும் அந்நியர் மத்தியில் அல்லது வேலை செய்யும் அலுவலகத்தில் வழக்கமாக காணப்படாத நாகரிகமற்ற பிரச்சனைகளை அடிக்கடி சந்திக்கின்றனர். கணவனும் மனைவியும் நாளுக்கு நாள் தங்களுடைய கஷ்டங்கள், சோர்வுகள், சவால்கள், ஏமாற்றங்கள் அடிக்கடி வார்த்தைகளாக வெடிக்கின்றன. மனநிலைகள் வெளிப்படுத்தப்படுகின்றன, வார்த்தைகள் அள்ளி வீசப்படுகின்றன, வேதனைகள் பாரமாக்கப்படுகின்றன, கண்ணீர்கள் சிந்தப்படுகின்றன யாரோ ஒருவர் தவறிழைத்து விட்டார்.

ஆனால் யார் தன் குற்றத்தை ஒத்துக்கொள்ளுவார்? ஒருவேளை யாரும் நேர்மையுடன், உணர்வடைந்து ‘நான் தவறிழைத்து விட்டேன் நான் அதைச் சொல்லியிருக்கக்கூடாது’ என தம்மை நிதானித்துப் பார்க்கமாட்டார்கள். பதிலாக, ஒரு குளிர்ச்சியான மௌனம் ஒரு வேளை சச்சரவினை முடிவுக்குக் கொண்டு வரும், பின்பு இருவரும் தங்களுடைய சொந்த வேலைக்குத் திரும்புவார்கள். நேரங்கள் கடந்து செல்லும், குளிர்ந்தநிலை இருவருடைய இருதயத்திற்குள் ஆழம் ஆழமாக சென்று முடிவை உண்டாக்கும். ஒரு வேளை அடுத்தநாள், அல்லது அதற்கடுத்த நாள், காரியங்கள் ஒரு வழியாக மறுபடியும் சீராகக் காணப்படும். உரையாடல் பழைய நிலையைக் கொண்டுவரும். வாழ்க்கை தொடர ஆரம்பிக்கும்.

ஆனால் இருவருடைய இருதயங்களில் என்ன நடந்திருக்கின்றது? காயங்கள் உண்டாக்கப்பட்டது, பாதுகாப்பிற்கென்று கடினமான உணர்ச்சியற்ற நிலை உருவாக்கப்பட்டது. சுகமாக்கும் நிவாரணி உபயோகிக்கப்படவில்லை, எனவே நிரந்தர

தமிழக கிறிஸ்துவின் சபை ஊழியர்களுக்கான
ஒரு நாள் கூட்டத்தில்
கலந்துகொண்ட
தேவ தாசர்கள்.
இக்கூட்டங்களுக்கு
உதவி செய்தவர்
சகோ.மோகன் மற்றும்
திருச்சி சிட்டி கிறிஸ்துவின் சபையார்.
மூன்று மாதங்களுக்கு
ஒரு முறை இக் கூட்டங்கள் நடைபெறும்
நீங்கள் கிறிஸ்துவின் சபை ஊழியராக இருந்தால்
அனுமதி பெற்று கலந்துகொண்டு பயன்பெறுங்கள்.
கிறிஸ்துவின் சபையாராகிய நாம் கிறிஸ்துவின்
உபதேசத்தினால், தமிழகத்தை
அவருடைய சத்தியத்தாலே நிறைப்போம்!

GG REALLANDS
PROMOTERS PVT.LTD.,

Contact:
B. Arjunan
94435 58041
GG.Mohan
93451 11920

## இவர்கள் யார்?

"இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" -வெளி.7:14



**இவர்களைப்போல தமிழகத்தில் கிறிஸ்துவின் சபையில் ஊழியம் செய்யும் ஆயிரக்கணக்கானோர் உண்டு அவர்களுக்காகவும் ஜெபிப்போம்.**



# திருச்சபை வரலாறு

### சபையின் முற்பிதாக்கள்

"வேறுசிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அனுபவித்தார்கள். கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள் பரிட்சிக்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள். செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத்தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள்" எபிரெயர் 11:36,37.

முதலாம் நூற்றாண்டிற்கு முன்பாகவே இனி நடக்கப்போகிற துன்புறுத்தல்களை மேற்கொண்டு அதனை தாங்கிக்கொள்ள கிறிஸ்தவர்கள் தயாராக இருக்க ஆலோசனையாக கூறப்பட்டபடியே லட்சோப, லட்சமக்கள் பலபாடுகள்பட்டு, எரிக்கப்பட்டு, வெட்டப்பட்டு மிருகங்களுக்கு இறையானார்கள். எனவே ஆரம்பம் முதல் நடைபெற்ற கொடுமைகளை இரத்தம் உறையவைக்கும் சம்பங்களை இனிவரும் காலங்களில் தெளிவாய் அறியலாம். மற்றவர்களையும் அறிந்துகொள்ள உதவுங்கள்.

*- John S.Nathan*

**வேத அறிவுப்போட்டி**
**எண் 143-ன் விடைகள்**

1.பவுல் -2கொ.11:6
2. இஸ்ரவேலின் -ஓசி.5:5
3. புறஜாதி -கலா.3:14
4. எத்தியோப்பியரின் புத்திரரை - ஆமோ.9:7
5. தம்முடைய மாம்சத்தினாலே - எபே.2:15
6. நினிவே -யோனா4:11
7. பவுல் - பிலி.4:14
8. யாக்கோபு - மீகா3:11
9. தேவ கோபாக்கினை வரும் - கொலோ.3:6
10. அக்கினியைப்போல - நாகூம்1:6

**வேத அறிவுப்போட்டி**
**எண் 143-ல் வெற்றிபெற்றவர்கள்**

1. N.விஜயானந்த் - ஓலப்பாளையம்
2. M.இராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
3. R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
4. P.சரவனகுமார் - கோபி
5. M.வேலு - கீழ்முருங்கை
6. J.ஐசக் - வண்ணாரப்பேட்டை
7. N.ஜான்செல்லையா - மதுரை
8. Tmt.மரகதம் திரவியம் - கோம்பை
9. J.நிர்மலா ஜான் - மதுரை
10. A.ரெபேக்காள் - மதுரை
11. M.சாலொமோன் - கொடைக்கானல்
12. R.சரோஜா - தென்கலம்

### நடப்புச் செய்திகள்

♑ தமிழகத்தை சேர்ந்த பரத நாட்டிய ஆசிரியை ராணி ராமசாமிக்கு அமெரிக்காவின் தேசிய கலை கவுன்சில் உறுப்பினர் பதவி அளிக்கப்பட்டுள்ளது.

♑ பி.சி.சி.ஐ.,யுடன் ஏற்பட்ட கருத்துவேறுபாடுகளை மறந்து, பொது மன்னிப்பு கேட்டார் கபில்தேவ், இது ஏற்றுக்கொள்ளப்பட்டதால் ரூ1.5 கோடி சிறப்பு நிதி உதவி உட்பட அனைத்து சலுகைகளையும் உடனடியாக பெறுகிறார்.

♑ நாட்டின் 13வது ஜனாதிபதியாக ஜூலை 25-ம் தேதி பதிவியேற்ற பிரணாப் முகர்ஜிக்கு

# கிறிஸ்துவை பிரசங்கியுங்கள் ஆனால் சபையை அல்ல

## Preach Christ, but Not the Church

*J.C.Choate*



மக்கள் அடிக்கடி சொல்கிறார்கள், "நான் சபையில் ஆர்வமுடையவனாக இல்லை - ஒழுங்கு படுத்தப்பட்ட மார்க்கத்தில். பொதுவாக கிறிஸ்துவை பிரசங்கம் செய்யுங்கள், ஆனால் சபையைக் குறித்து என்னை வருத்தப்படுத்தாதீர்கள்" என்று.

பழைய ஏற்பாடு முழுவதிலும் ஒரு ஆவிக்குரிய இராஜ்யத்தின் வருகையை குறித்து பெருமளவில் சொல்லப்பட்டிருக்கிறது. கடைசி நாட்களில் கர்த்தருடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுமென்று ஏசாயா முன்னுரைத்தார் (ஏசா.2:2-3). தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார் என்று தானியேல் சொன்னார் (தானி.2:44). அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் மாம்சமான யாவர் மேலும் ஊற்றப்படுவார் என்று யோவேல் சொன்னார் (யோவேல் 2:28-29). மிக முக்கியமான சம்பவங்களில் யோவேலின் தீர்க்கதரிசனம் நிறைவேறியது என்பதை பேதுரு விளக்கியது அப்.2-ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

யோவான் ஸ்நானகன் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான் (மத்.3:1,2), மேலும் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று தம்மோடு நின்றவர்களிடம் கிறிஸ்து சொன்னார் (மாற்கு9;1). இறுதியாக கிறிஸ்து இந்த கல்லின்மேல் என்சபையைக் கட்டுவேன் என்று சொன்னார் - அவர் தேவனுடைய குமாரனாய் இருந்தார் என்பதே அந்த உண்மை (மத்.16:18-19; 1கொரி.3:11). பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை அப்போஸ்தலக்கு கொடுப்பதாக அவர் வாக்குத்தத்தம் செய்தார், புருஷரும், ஸ்திரீகளும் ராஜ்யமாகிய சபையினுள்ளே பிரவேசிப்பதற்கு அவர்கள் என்னவெல்லாம் செய்யமுடியுமோ அதை செய்ய சொல்வதற்கான அதிகாரத்தை அப்போஸ்தலருக்கு கொடுத்தார்.

அப்.2-ம் அதிகாரத்தில் எருசலேமில் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதை குறித்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியதை நாம் காண்கிறோம். பரிசுத்தாவியானவரின் வல்லமை அப்போஸ்தலர்கள் மேல் ஊற்றப்பட்டதால், பரிசுத்தாவியானவர் அவர்களுக்கு பேச்சை கொடுத்ததினால் அவர்கள் அந்நிய பாஷையில் பேசத் தொடங்கினார்கள் அல்லது வேறு பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள். இதுதான் சீக்கிரம் ஸ்தாபிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது என்று யோவான் சொன்ன ராஜ்யமாக இருந்தது. பின்னர் அப்போஸ்தலர்கள் முதல்முறையாக சுவிசேஷத்தை பிரசங்கித்து பாவம் நிறைந்த மனுஷர்கள் எப்படி இரட்சிப்படைய முடியும் என்பதை வெளிப்படுத்தி ராஜ்யத்தின் அல்லது சபையின் திறவுகோல்களை








# The 3rd World Evangelism Retreat Message by Bro.Jerry

செப்டம்பர் 24-ம் தேதி முதல் 26-ம் தேதி வரை காலாண்டு விடுமுறை நாட்களில் நடைபெறும். கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் ரூ50/- செலுத்தி உங்களுடைய பெயரை பதிவு செய்துகொள்ளுங்கள். 1,2 தெசலோனிக்கேயர் மற்றும் யூதா புத்தகங்களிலிருந்து பாடங்களை Bro.Jerry அவர்கள் நடத்துவார்கள். உங்களுடைய பதிவுக்கு முந்துங்கள். தங்குமிடமும், உணவும் "The 3rd World Evangelism Retreat" சார்பாக வழங்கப்படும். வந்து செல்லும் பயணசெலவு உங்களுடையது. -தொடர்புக்கு: 94435 58041

B.ARJUNAN, Evangelist
CHURCH OF CHRIST
P.O.Box 5
Batlagundu -624 202, Dindigul Dist, SOUTH INDIA.

சந்தேகப்படாமல் விசுவாசத்தோடு கேட்கவேண்டும். சந்தேகத்தோடு நாம் கேட்போமானால் ஒன்றையும் பெற்றுக்கொள்ள முடியாது. லூக்கா 11:5-10 வசனங்களில் பார்க்கும்போது; விசுவாசத்தோடு கேட்டால் கேட்கிற யாவரும் பெற்றுக்கொள்ளுகிறார்கள். தேடுகிறவர்கள் கண்டடைகிறார்கள், தட்டுகிறவர்களுக்குத் திறக்கப்படும் என்று நமக்குச் சொல்லப்பட்டபடி நடக்கிறது.

லூக்கா 18:9-14 இங்கே நாம் பெருமையான, மேட்டிமையான ஜெபத்தை காண்கிறோம். பரிசேயனும், ஆயக்காரனும் ஜெபித்தார்கள். பரிசேயன் தன்னை பெருமையாகவும் நீதிமானைப் போலவும் தன்னைக் காட்டிக்கொண்டான். ஆனால் ஆயக்காரன் தன்னை தாழ்மையுள்ளவனாகவும். ஆவியில் எளிமையுள்ளவனாகவும் தன்னை வெளிப்படுத்தினான். ஆகவே தன்னை தானே உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னைத் தானே தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்று வசனம் தெளிவாகப் போதிக்கிறது. மத்தேயு 26:39-ல் நாம் தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிக்கவேண்டும். இயேசுகிறிஸ்து ஜெபிக்கும்போது இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்குமானால் நீங்கும்படி செய்யும் ஆனாலும் என் சித்தத்தின்படி அல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபித்தார்.

2கொரிந்தியர் 12:7-9 இங்கே அப்போஸ்தலனாகிய பவுல் ஜெபிக்கிறதை பார்க்கிறோம். பவுலுக்கு ஒரு முள் கொடுக்கப்பட்டு இருந்தது. இதை குறித்து மூன்று முறை தேவனை நோக்கி ஜெபித்தார். ஆனால் தேவன் அவருக்கு ஜெபித்ததின் படியாக அதாவது கேட்டதின்படியாக கொடுக்கவில்லை. அதற்கு மாறாக தேவன் உன்னுடைய பலவீனத்தில் என் பெலன் பரிபூரணப்படும் என்றும் என் கிருபை உனக்குப்போதும் என்றும் சொன்னார். ஆகவே இதில் அப்போஸ்தலனாகிய பவுல் ஏறெடுத்த ஜெபத்தில் தேவன் அவருடைய சித்தத்தின்படியே செய்தார். அவர் இப்படி ஜெபித்ததற்குப் பிறகு பலவீனங்களிலேயே மேன்மை பாராட்டுகிறேன் என்றார்.

யாக்கோபு 4:3-ல் நாம் சரியானவற்றை அவருடைய சித்தத்தின்படி கேட்க வேண்டும். நாம் ஜெபத்திலே எதை கேட்டாலும் பெற்றுக்கொள்ளலாம் என்று நினைக்கிறோம். ஆனால் அவருடைய சித்தத்தின்படி ஜெபிக்க வேண்டும். இங்கே வசனத்திலே பார்க்கிறோம் உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி தகாதவிதமாய் கேட்கிறீர்கள் ஆகவே பெற்றுகொள்ள முடியவில்லை. ஆகவே நாம் ஜெபத்திலே எதை கேட்டாலும் தேவனுடைய சித்தத்தின்படியே கேட்க வேண்டும்.

நாம் வாழ்கின்ற நாட்களிலே ஒவ்வொரு நாளும் ஜெபிக்கும் போது நாம் தேவனிடத்தில் எப்படி ஜெபிக்க வேண்டும் என்றும், ஆராதனையில் எப்படி ஜெபிக்க வேண்டும் என்றும்; பொது இடங்களில் எப்படி ஜெபிக்கவேண்டும் என்றும்; நாம் ஜெபிக்கும் போதெல்லாம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஜெபிக்க வேண்டும் என்றும், அத்தோடு மாத்திரம் அல்ல கண்டிப்பாக விசுவாசத்தோடும், தாழ்மையோடும் தேவனுடைய சித்தத்தின்படியும் நாம் ஜெபிக்கவேண்டும் என்றும் பார்த்தோம். இவ்விதமாக ஜெபித்து தேவாசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.



பயன்படுத்தினார்கள். அதைக் கேட்டவர்கள் விசுவாசித்து, தங்களுடைய பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர்தாமே சபையிலே சேர்த்தார். ஆகையால் தேவனுடைய வீடாக அல்லது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாக இருக்கிற (1தீமோ.3:15; 1கொரி.12:27) ராஜ்யமும், சபையும் ஒரே ஸ்தாபனமாக இருக்கிறது. பவுல் கொலோசேயிலிருந்த சபைக்கு தேவனை குறித்து, "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்துக்கு உட்படுத்தினவர்" (கொலோ.1:13) என்று சொன்னார். எபிரெய நிருப எழுத்தாளர், "அசைவில்லாத ராஜ்யத்தை பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும், பக்தியோடும் தேவனுக்கு பிரியமாய் ஆராதனை செய்யக்கடவோம்" (எபி.12:28) என்று சொன்னார். இந்த வேளையில் அவர் எந்த ராஜ்யத்தை குறித்து பேசிக் கொண்டிருந்தார்? தேவனுடைய ராஜ்யமாகிய பரத்திலிருந்து வந்த ராஜ்யம், கர்த்தரால் இரட்சிக்கப்பட்டு அவருடைய சபையிலே சேர்க்கப்பட்டவர்களை கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய தம்முடைய சரீரத்தின் அவயவங்களாக்குகிறார். மீண்டும் அது சபையாக இருக்கிறது (எபே.1:22,23; கொலோ.1;18).

இப்பொழுது கர்த்தருடைய மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலுக்கு பின்னேயுள்ள கிறிஸ்துவை குறித்த குறிப்பு சொல்லுகிறது, 'அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி **தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை** அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்" (அப்.1:3). வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டும் என்றால், கிறிஸ்து சீக்கிரத்திலே எருசலேமிலே ஸ்தாபிக்கப்பட இருக்கிற தம்முடைய **ராஜ்யம் அல்லது சபையை** குறித்த முடிவான போதனைகளை தம்முடைய அப்போஸ்தலருக்கு கொடுத்துக் கொண்டிருந்தார். அவர் தொடர்ந்து, "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்" (அப்.1:8).

ஆகையால் அப்.2-ம் அதிகாரத்தில் ராஜ்யமாகிய கர்த்ததருடைய சபை ஸ்தாபிக்கப்பட்டது, அப்பொழுது 3000பேர் தேவனுக்குக் கீழ்ப்படிந்து சபையிலே சேர்க்கப்பட்டார்கள் (அப்.2;40). சுவிசேஷம் எருசலேமிலும், யூதேயாவிலும் ஆகிய இரண்டு இடங்களிலும் மீண்டும் மீண்டும் பிரசங்கிக்கப்பட்டது, ஆயிரம் பேருக்கு மேலானோர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து **அதே சபையிலே** சேர்க்கப்பட்டார்கள்.

ஆனால் இன்னும் அதிகமான காரியங்கள் உள்ளன. இந்த இடத்தில் குறிப்பு சொல்லுகிறது, "அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவை குறித்துப் பிரசங்கித்தான்" (அப்.8:5). தொடர்ந்து நாம் "தேவனுடைய ராஜ்யத்துக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும், ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப்.8:12) என காண்கிறோம்.

ஆகையால் நமக்கு என்ன இருக்கிறது? கர்த்தர் எவ்வாறு அப்போஸ்தலருக்கு **தேவனுடைய ராஜ்யத்தை** குறித்து போதித்தார் என்று நாம் காண்கிறோம், பின்னர் பிலிப்பு சமாரியர்களுக்கு கிறிஸ்துவை பிரசங்கித்தார். ஆனால் ஆச்சரியமான வகையில் அவரும் அவர்களுக்கு **தேவனுடைய ராஜ்யத்தை** குறித்து பிரசங்கித்தார்!

ஏன் ராஜ்யத்தை அல்லது சபையைக் குறித்த வலியுறுத்தல் ஏன் இவ்வளவு அதிகமாக இருந்தது? ஏனென்றால் அது மனுக்குலத்திற்காக தேவன் கொண்டிருந்த முயற்சிகளின் உச்ச நிலையாக அது இருந்தது; தேவன் இந்த சாதனத்தின் மூலமாக இரட்சிப்பை அளித்தார். இது தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டபடியே தேவனிடமிருந்து வந்தது, இரட்சிக்கப்பட்டவர்கள் சபையிலே சேர்க்கப்பட்டார்கள்! இதன் முக்கியத்துவத்தை மிகைப்படுத்தி கூறமுடியாது.

ஆம், அடிக்கடி சபை முக்கியமானதல்ல என்றும், நாம் அதை குறித்து அதிகமாக பேச வேண்டாம் என்றும் மக்கள் கூறுவதை கேட்கிறோம். சபை என்பது இரட்சகர் அல்ல என்பது மெய்தான். இது இரட்சிக்கப்பட்டவர்களாகிய மனுஷரால் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கிறிஸ்து சபைக்கு இரட்சகராக இருக்கிறார், அவர் சபைக்காக மரித்து அதை தம்முடைய சுய இரத்தத்தினால் விலைக்கு கிரயமாக வாங்கியிருக்கிறபடியால் நாம் இரட்சிக்கப்படவும், பரலோகத்திற்குச் செல்லவும் விரும்புவோமேயாகில் அவசியம் நாம் அதன் அங்கங்களாக இருக்கவேண்டும்.

புதிய ஏற்பாட்டில் சபை அல்லது இராஜ்யத்தை குறித்து சொன்ன வேதவாக்கியங்கள் அனைத்தையும் நீங்கள் நீக்கி விடுவீர்களேயாகில், புதிய ஏற்பாட்டில் எவ்வளவு மீதியாயிருக்கும்?

எல்லாவற்றிற்கும் மேலாக சபையை கட்டி அதற்கு தலையாகவும், இரட்சகராகவும் கிறிஸ்து இருந்து அதன் அஸ்திபாரமாகவும் செயல்பட்டு, அதற்கு தம்முடைய பெயரையே இட்டு அழைப்பாரேயாகில், அதற்காகவே தாம் திரும்பவும் வந்து அதை தேவனிடத்தில் ஒப்புக்கொடுப்பாரேயாகில், யாராகிலும் ஒருவர் அது முக்கியமானது அல்ல என்று எவ்வாறு சிந்திக்க முடியும்? நாம் அதன் தெய்வீகமான தொடக்கத்தையும், அதன் நோக்கம், பணி மற்றும் தேவனுடைய ஒட்டு மொத்தமான திட்டத்தில் அதனுடைய மகத்தான ஸ்தானத்தின் முக்கியத்துவத்தை நாம் உலகத்துக்கு பிரசங்கியாவிட்டால் மனுஷர் எவ்வாறு அதைக்குறித்து அறிந்துகொள்வார்கள்?


முடிவாக நாம் சபையை பாராட்டி கர்த்தர் அதை அன்புகூருகிற விதமாகவே நாமும் அன்புகூர்ந்து அதன் அங்கங்களாயிருக்க நாம் நன்றியறிதல் உடையவர்களாயிருந்து வாஞ்சையோடே மற்றவர்களுக்கு அதைக்குறித்து சொல்லுவோமாக! அப்பொழுது அது உலகம் முழுவதும் பரவும். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லிய வண்ணம் "சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்" (எபேசியர் 3:21)

-தமிழில் மொழிபெயர்த்தவர் **சகோ: ரவி ஆசீர்.**



# ஜெபம் - Prayer

-GG.Mohan



**ஜெபம் என்பது நாம் தேவனோடு பேசுவது**

"தேவன் நம்மோடு பேசும்போது அவர் நமக்கு கொடுத்த வசனத்தின் (வார்த்தையின்) மூலம் பேசுகிறார். நாம் தேவனோடு பேசும்போது ஜெபத்தின் மூலமே பேசுகிறோம். இயேசுகிறிஸ்து பூமியில் இருந்தபோது தம்முடைய சீஷர்களுக்கு ஜெபம் எப்படிச் செய்யவேண்டும் என்று கற்றுக்கொடுத்தார்.

லூக்கா 11:2-ல் நீங்கள் ஜெபம் பண்ணும்போது பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய இராஜ்யம் வருவதாக என்று நேரடியாக தேவனை நோக்கி ஜெபிக்க கற்றுக்கொடுத்தார். அந்தப்படியே அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தின் படி சபை (இராஜ்யம்) உருவானது. அடுத்தபடியாக நாம் எப்படி ஜெபிக்கவேண்டும் என்று இயேசு கிறிஸ்து நமக்கு கற்றுக்கொடுக்கிறார்.

யோவான் 14:13,14 "என் நாமத்தினாலே எதை கேட்பீர்களோ குமாரனில் பிதா மகிமைப்படும்படி அதை செய்வேன் என்றார்". யோவான் 14:23-ல் இயேசு சொன்னது நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக் கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். ஆகவே நாம் ஜெபிக்கும்போது இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனை நோக்கி ஜெபிக்கவேண்டும்.

அப்போஸ்தலர் 4;23-30 அப்போஸ்தலனாகிய பேதுருவும் யோவானும் சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கப்பட்ட பின்பு தங்களைச் சேர்ந்தவர்களிடத்தில் வந்து பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் தங்களுக்குச் சொன்ன யாவையும் அறிவித்தார்கள். அப்பொழுது அங்கிருந்த அனைவரும் தேவனை நோக்கி இயேசுவின் மூலம் ஜெபித்தார்கள். நாம் ஒருவருக்காகவோ, பலருக்காகவோ ஜெபிக்கும்போது மற்ற அனைவரும் ஒரு மனதாக அந்த ஜெபத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு ஆமென் என்று சொல்லுகிறோம். இப்படி ஜெபம் பண்ணும்போது அநேகராகிய நாம் ஒன்று சேர்ந்து ஜெபித்ததுபோல உணர்கிறோம்.

யாக்கோபு 5:16-ல் உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள் என்றும் நீதிமான்கள் செய்யும் உருக்கமான ஜெபம் மிகவும் பெலன் உள்ளதாக இருக்கிறது என்றும் பார்க்கிறோம். சங்கீதம் 69;13-17 தாவீது தன்னுடைய உண்மையான நிலையை சொல்லி ஜெபிப்பதை பார்க்கிறோம். நாமும் கூட உண்மையான நிலையைச் சொல்லி ஜெபிக்கவேண்டும்.

யாக்கோபு 1;6,7 நாம் சந்தேகப்படாமலும், விசுவாசத்தோடு ஜெபிக்கவேண்டும் என்று வசனத்தில் பார்க்கிறோம். நாம் எவ்வளவாகிலும்